# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.**

| | | | |
|---|---|---|---|
| **Case No** | : | **DVC.No.07/2022** | **Date:01.02.2024** |
| **Deposition of Witness for** | : | **ம.சா.1** | |
| **Name** | : | **கௌரி** | |

**குறுக்கு விசாரணை-**

**1.** நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.இ,. கம்யூட்டர் சைன்ஸ் படித்துள்ளேன். 3 1/2 பவுன் செயினை யார் கேட்டார்கள் என்றால் 1ம் எதிர்மனுதாரரும், அவருடைய குடும்பத்தார்களும். கோமதி என்பவர் என் கணவரிடம் கடனை திருப்பிகேட்டதாக சொல்வதுஎனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது நான் எத்தனை பவுன் நகை அணிந்திருந்தேன் என்று மனுவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2. 1ம் எதிர்மனுதாரர் எனது செல்போன் நெம்பரை பிளாக் செய்துவைத்திருந்தார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் முதல் திருமணம் என்று கூறி கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்று அதனை காண்பித்து திருமணம் செய்தார் என்று கூறியுள்ள நிலையில் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏற்கனவே வித்யா என்ற பெண்ணை திருமணம் செய்து அவரை சட்டப்படி விவாகரத்து செய்தபிறகு தான் என்னை திருமணம் செய்தார் என்றால் சரிதான். மேற்படி விவாகரத்து செய்த சங்கதி திருமணத்திற்கு முன்பே என்னிடம் 1ம் எதிர்மனுதாரர் தெரிவித்தார் என்றால் இல்லை.

3. அவர் மேற்படி உண்மையை கூறிதான் திருமணம் செய்தார் என்று நான் வழக்கிற்காக அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் என்னை வீட்டில் அடைத்துவிட்டு ரூ.5,00,000/- பணமும், 15

பவுன் நகையும் கொடுக்கவேண்டும் என்று மிரட்டி தினமும் கொடுமைபடுத்தியதாக தெரிவித்துள்ள நிலையில் அது சம்பந்தமாக உடனடியாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ஆறு மாதம் கழித்துதான் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் எங்களுக்குள் சமாதானம் பேசியும் சமாதானம் ஆகவில்லை என்பதால் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம்.

4. எதிர்மனுதாரர்கள் அவ்வாறு என்னை வீட்டில் அடைத்துவைத்து கொடுமைபடுத்தவில்லை என்றும், எங்களுக்குள் சமாதானம் ஏற்படாததால் நான் மேற்கண்டவாறு பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தற்போது என்ன வேலை பார்க்கிறேன் என்றால் வீட்டில்தான் இருக்கிறேன் வேலைக்கு செல்லவில்லை. நான் குமாரபாளையத்தில் கம்யூட்டர் சென்டர் வைத்து நடத்தி வருகிறேன் என்றும், வழக்கிற்காக வேலை பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னிட்டு எவ்வளவு நாட்கள் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் ஆறு மாதம் சேர்ந்து வாழ்ந்தேன். ஒரு மாதம் தான் சேர்ந்து வாழ்ந்தேன் என்றும், பின்னிட்டு நான் பிரச்சனை செய்துகொண்டு எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம். கௌரி

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2024.02.01 20:32:35 -1000

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.